# திருநெல்வேலி மாநகராட்சி

## 30.06.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

## பொருட்கள்

1. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண்: 51 பகுதிக்கு உட்பட்ட திருநகர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது ஆகும். மேலும் மேற்படி மேல்நிலைத் தொட்டி மற்றும் தரைமட்டத் தொட்டியானது உபயோகப்படுத்தப்படவில்லை. மேற்படி தரைமட்ட தொட்டி மற்றும் மேல்நிலைத்தொட்டிக்கு கிணறுகளிலிருந்து குடிநீர் சேகரம் செய்யப்பட்டு அந்த குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. பின்னர் கிணற்று நீருக்கு பதிலாக அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டபடி பகிர்மான குழாய்கள் அருகில் உள்ள மகிழ்ச்சி நகர் மற்றும் கனரா வங்கி காலனி மேல்நிலைத் தொட்டிகளில் இருந்து இணைப்புகள் வழங்கப்பட்டு சுத்தமல்லி ஆற்றிலிருந்து வரப்பெறும் ஆற்றுநீர் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, அந்த தரைமட்டத தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டி உபயோக மற்ற நிலையில் இருப்பதால் தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேற்படி மேல்நிலைத் தொட்டி தானாக இடிந்து விழுந்து விட்டால் அதனால் ஏதேனும் இழப்புகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் மேற்படி இடமானது அப்பகுதி மாமன்ற உறுப்பினர், உதவி ஆணையர் மற்றும் அப்பகுதி மக்கள் நலச்சங்கத்தாருடன் ஆய்வு செய்யப்பட்டது. எனவே, இடிந்து விழும் நிலையில் உள்ள மேல்நிலைத் தொட்டியை உரிய பாதுகாப்புகளுடன் இடித்து அப்புறப்படுத்த மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண்: 51 பகுதிக்கு உட்பட்ட திருநகர் பகுதியில் தரைமட்ட தொட்டி மற்றும் மேல்நிலைத்தொட்டி அப்பகுதி மாமன்ற உறுப்பினர், உதவி ஆணையர் மற்றும் அப்பகுதி மக்கள் நலச்சங்கத்தாருடன் ஆய்வு செய்யப்பட்டது. எனவே, இடிந்து விழும் நிலையில் உள்ள மேல்நிலைத் தொட்டியை உரிய பாதுகாப்புகளுடன் இடித்து அப்புறப்படுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:இ1/2224/2022**

**தீர்மானம் எண்: 48 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

2. அரசாணை எண் 62 நிதித்துறை நாள் 17.1.1994-ன்படி திருநெல்வேலி மாநகராட்சி உடன் நிகழ் தணிக்கை பிரிவில் அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடஙகளில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிறப்படிகளின் செலவினத் தொகை 50% தணிக்கை கட்டணமாக அரசுக்கு செலுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில் மாநகராட்சி தணிக்கை துணை இயக்குநர் திருநெல்வேலி மாநகராட்சி தணிக்கை அவர்களின் கடிதம் ந.க.எண்:**அ1/245/2022** நாள்:9.6.2022ன்படி 2021-2022ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் **ரூ46,73,581/-** உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விபரப்படி 2021-2022ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் **ரூ46,73,581/-** மட்டும் உரிய அரசு தலைப்பில் தவணை முறையில் செலுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொருளில் கணுடுள்ளவாறு 2021-2022ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் **ரூ46,73,581/-** மட்டும் உரிய அரசு கணக்கு தலைப்பில் தவணை முறையில் செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்: பி6/5639/2020**

## தீர்மானம் எண்: 49 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

3. அரசாணை எண் 957, 959 Public (Law officers) Department நாள் 9.11.2021-ன்படி அரசு சிறப்பு வழக்கறிஞர் (Special Government Pleader) மற்றும் அரசு வழக்கறிஞர்களாக (Government Advocate) நியமிக்கப்பட்ட கீழ்க்கண்ட வழக்கறிஞர்களை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மாநகராட்சி சார்பாக தாக்கலாகும் வழக்குகளை நடத்திட மாமன்ற வழக்கறிஞர்களாக நியமனம் செய்து மாமன்ற தீர்மானம் எண் 155 நாள் 24.01.2022ல் தீர்மானிக்கப்பட்டு, அதன்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

1. திரு.S.P.மகாராஜன், அரசு சிறப்பு வழக்கறிஞர்
2. திரு.A. சிவனுப்பாண்டியன், அரசு வழக்கறிஞர்

தற்போது திருமதி.எம்.அனிதா, பி.எஸ்.சி.பி.எல் என்பவர் தன்னை சென்னைடஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் மாநகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்திட கோரியுள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திருநெல்வேலி மாநகராட்சி தொடர்பான பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு தாக்கலாகும் வழக்குகளில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள மாநகராட்சி வழக்கறிஞர்களுடன் தேவைப்படும்பட்சத்தில் ஒருங்கிணைந்து பணி செய்யவும், வழக்குகள் தொடர்பாக அவ்வப்போது சட்ட ஆலோசனைகள் பெற்றிட ஏதுவாகவும் திருமதி.எம்.அனிதா, பி.எஸ்.சி.பி.எல்., என்பவரை மேற்கண்ட பணியில் மூன்று ஆண்டுகளுக்கு ஈடுபடுத்தவும், அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வழக்குக்கட்டணம் வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திருநெல்வேலி மாநகராட்சி தொடர்பாக தாக்கல் செய்யப்படும் பல்வேறு வழக்குகளில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள மாநகராட்சி வழக்கறிஞர்களுடன் தேவைப்படும்பட்சத்தில் ஒருங்கிணைந்து பணி செய்யவும், வழக்குகள் தொடர்பாக அவ்வப்போது சட்ட ஆலோசனைகள் பெற்றிட ஏதுவாகவும் திருமதி.எம்.அனிதா, பி.எஸ்.சி.பி.எல்., என்பவரை மேற்கண்ட பணியில் மூன்று ஆண்டுகளுக்கு ஈடுபடுத்தவும், அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வழக்குக்கட்டணம் வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : சி1/5592/21**

**தீர்மானம் எண்: 50 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**